**மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2016**

---

மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் தேசிய வனவிலங்கு அதிகாரச்சட்டத்தின் 8(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தெபடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 53 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடும் சகல ஒப்பீட்டுத் தகவல்களுக்காக முன்னைய காலப்பகுதியின் ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் குறிப்புக்கள் அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09**

நியமத்தின் 15 இன் பிரகாரம் இறுதி இருப்பு கிரயம் மற்றும் தேறிய நிகர பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி கணக்கிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 13 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை இனங்காணும் போது குறித்த சொத்துக்கள் பயன்பாட்டிற்காக இருக்க வேண்டிய சொத்தாக இருக்க வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திடம் காணப்படாத ரூபா 32,542,118 தொகையான மோட்டார் வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 6,508,424 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 6,508,424 குறைத்தும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதி ரூபா 26,033,694 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் முழுமையாக பெறுமானத்தேய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 25,831,545 கிரயத்திலான 6 வகையான வெவ்வேறு சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிந்ததுடன் பயன்படுத்த கூடிய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியனை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தினால் 36 ஒப்பந்தங்களுக்குரிய வழங்குனர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் தொகை ரூபா 34,978,798 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,993,911 தொகையான செலவினம் அட்டுறுவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திற்குரிய பெறுமதி சேர் வரி ரூபா 4,988,559 தொகை மீளாய்வாண்டின்போது அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் இலாபம் குறைத்தும் அட்டுறு செலவினம் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தெஹிவள மிருககாட்சிசாலையின் வியாபார நிலையமொன்றிலிருந்து பெறவேண்டிய வாடகை மற்றும் கிடைக்க வேண்டிய மின்கட்டணம் முறையே ரூபா 874,930 தொகை ரூபா 13,642 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) தெஹிவள மிருககாட்சிசாலையின் இரண்டு சிற்றுண்டிசாலைகளின் வாடகை தாமதத்தின் பேரில் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 149,080 ஆன தாமதக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பின்னவல வாகொல்ல புதிய மிருகக்காட்சிசாலையில் அமைந்துள்ள ஞாபகார்த்த விற்பனைக்கூடம் 2016 யூன் 15 ஆந் திகதி மீளக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூலை மாதத்திற்குரிய வாடகை வருமானம் உட்பட ரூபா 30,390 கிடைக்க வேண்டிய வருமானமாக கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 2014 ஆம் ஆண்டின் போது தேசிய மிருககாட்சிலைகள் திணைக்களத்தின் விலங்கின கொள்வனவு செலவினத் தலைப்பின் ரூபா 5,000,000 செலவிடப்பட்டு 4 தீக்கோழிகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்சி விலங்குகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 340,982 தொகையான கடன் கொடுத்தோர் தொடர்பாக காலப்பகுப்பாய்வுடன் விரிவான பட்டோலையொன்றும் மீதி உறுதிப்படுத்தலொன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

தெஹிவள மிருககாட்சிசாலையின் பறவைகள் பூங்கா அருகே வியாபார கூடங்கள் நடாத்திச்சென்ற தனிப்பட்ட தரப்பினரால் 2016 மார்ச் முதல் மே வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,540,930 ஆன வாடகையும் ரூபா 13,642 ஆன மின் கட்டணத்தையும் கொடுப்பனவு செய்யாமல் சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டிருந்ததுடன், அக்கட்டணங்களை அறவிடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 138(8)(9) | செலவினத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்த ரொருவால் கொடுப்பனவு உறுதிச்சீட்டு சரியானதெனவும் அனைத்து வகையிலம் பூரணமாக உள்ளதென பொறுப்புக் கூற வேண்டிய போதிலும் பொருள் கட்டளை மற்றும் பொருள் கையேற்கும் தாள்களின் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு மிருக உணவு கொள்வனவிற்காக ரூபா 841,567 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 237(அ),(ஆ) | மிருக உணவாக வழங்கப்படும் மரக்கறிகள், பழங்கள், இறைச்சி மற்றும் பொரேஜ் உணவுகள் உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமாக வழங்கப்பட்டுள்ளதாக சான்றிதழொன்று இல்லாமலும் பொருள் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தாமலும் ரூபா 113,582 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 371(2)(அ) | செலவினத்திற்காக சில்லறைக் கட்டுநிதி வழங்கப்படாமல் மீளாய்வாண்டில் அம்பாந்தோட்டை ரிதீயகம சபாரி பூங்காவின் செலவினத்திற்காக பூங்கா பொறுப்பு உத்தியோகத்தருக்கு 10 சந்தர்ப்பங்களின் போது தனிப்பட்ட பணத்தில் செலவு செய்த ரூபா 350,695 ஆன செலவினம் மீள்நிரப்பப்பட்டிருந்தது |
| (ஆ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.4(ஈ) | ஒப்பந்தமொன்றுக்காக கேள்வி கோரல் பதிவேட்டினை தயாரித்தல் அல்லது தயாரிப்பதற்கு மதியுரைச் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட எவரேனும் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு அந்த நிர்மாண ஒப்பந்தம் வழங்கப்பட முடியாத போதிலும் தெஹிவள மிருகக்காட்சிசாலையின் சுதந்திர யானை மதில் நிர்மாணச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக மதியுரை சேவைகள் வழங்கல் மற்றும் நிர்வான ஒப்பந்தம் ஒரே வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. |

(இ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபவிருத்தி நிர்மாண கேள்வி தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம்.

| | |
|---|---|
| ICTAD/SBD/04 இன் 8.1 மற்றும் 8.3 ஆம் இலக்க பந்திகள் | ஒப்பந்தப் பெறுமதி ரூபா 50 மில்லியனான அம்பாந்தோட்டை சபாரி பூங்காவின் அவுஸ்திரேலியா வலயத்தின் நிர்மாண நடவடிக்கைகள் வழிகாட்டலின் பிரகாரம் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 2017 மார்ச் 09 ஆந் திகதி வரையிலும் வேலைத்தளத்தினை சுத்திகரித்தல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான காலஅட்டவணையொன்று வேலை ஆரம்பித்த நாள் முதல் 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 581,182,256 மிகையானதுடன் அதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 631,057,480 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 49,875,224 வீழ்ச்சி தென்பட்டது. நிதியத்தின் மொத்த இலாபம் ரூபா 28,235,006 ஆல் அதிகரித்த போதிலும், ஏனைய செலவினம் ரூபா 80,547,567 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமான காரணங்காக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 397,537,423 ஆகவிருந்த மிகை 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 631,057,480 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 581,182,256 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனங்கள், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 432,641,277 ஆகவிருந்த பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதிளவில் ரூபா 719,861,014 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய விலங்கினப்பூங்கா அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நோக்கங்கள் பின்வருமாறு.

(i) தேசிய மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் ஆட்சேர்த்தல்.

(ii) தெஹிவளை வனவிலங்குப் பூங்காவைப் கண்டுகளிக்க வருபவர்களுக்கு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான விசேட இடத்தை வழங்குதல்.

(iii) பூங்காவிற்கு தடை செய்யப்பட்டவற்றை எடுத்துவருவதை பரீட்சிக்கும் முறைமையொன்றை தயாரித்தல்

(iv) வனவிலங்குப் பூங்காவில் சேவை புரிபவர்களுக்கு நலன்புரி மற்றும் ஊக்குவிப்புப் படித்திட்டத்தைத் தயாரித்தல்

(v) வனவிலங்குப் பூங்கா சம்பந்தமான சகல காரணங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அமைச்சருக்குப் பரிந்துரை வழங்குதல் தொடர்பாக அமைச்சரால் ஆலோசனைச் சபையொன்றை நியமித்தல்.

(vi) மேற்படி, ஆலோசனைச் சபைக் கூட்டமானது குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆண்டிலும் இரண்டு தடவைகள் நடாத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 06 நோக்கங்களுக்கு இடையே 05 நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பூங்காவிற்கு தடை செய்யப்பட்டவற்றை எடுத்துவருவதை பரீட்சிக்கும் முறைமையொன்றை தயாரித்தல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான தெஹிவள தேசிய யானைகள் சரணாலயம், பின்னவல யானைகள் சரணாலயம், வாகொல்ல புதிய மிருகக்காட்சிசாலை மற்றும் அம்பாந்தோட்டை ரிதீயகம சபாரி பூங்கா என்பவற்றை பார்வையிடுவதற்காக வருகை தந்தோர் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் கிடைத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| மிருகக்காட்சிசாலை | வகை | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|
| | | வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை | கிடைத்த வருமானம் (ரூபா) | வருகை தந்த பார்வையாளர் களின் எண்ணிக்கை | கிடைத்த வருமானம் (ரூபா) |
| தெஹிவளை மிருகக்காட்சிசாலை | உள்நாடு | 1,318,185 | 104,052,560 | 1,392,217, | 110,518,710 |
| | வெளிநாடு | 30,402 | 48,004,950 | 32,334 | 50,321,200 |
| பின்னவல யானைகள் சரணாலயம், | உள்நாடு | 734,699 | 54,730,570 | 666,881 | 49,915,190 |
| | வெளிநாடு | 362,662 | 765,973,750 | 381,105 | 788,248,500 |
| பின்னவல வாகொல்ல புதிய மிருகக்காட்சிசாலை | உள்நாடு | 333,219 | 25,848,250 | 267,656 | 20,972,850 |
| | வெளிநாடு | 2,213 | 1,735,750 | 1,838 | 1,509,250 |
| வாகொல்ல புதிய மிருகக்காட்சிசாலை | உள்நாடு | - | - | 217,207 | 48,560,000 |
| | வெளிநாடு | - | - | 499 | 991,250 |
| மொத்தம் | | 2,781,380 | 1,000,345,830 | 2,959,737 | 1,071,036,950 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பின்னவெல யானைகள் சரணாலயத்திற்கு வருகை தந்த உள்நாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 67,818 ஆல் அல்லது 9 சதவீதத்தால் வீழ்ச்சிடைந்திருந்ததுடன், வருமானமும் ரூபா 4,815,380 ஆல் அதாவது 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது

(ii) 2015 ஏப்ரல் 17 ஆந் ஆரம்பிக்கப்பட்ட பின்னவெல வாகொல்ல புதிய மிருககாட்சிசாலையை பார்வையிடுவதற்காக வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே 65,563 மற்றும் 375 ஆல் அல்லது 20 மற்றும் 17 சதவீதத்தால் வீழ்ச்சிடைந்திருந்தன. அதன் பிரகாரம் அதிலிருந்து கிடைத்த வருமானமும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே ரூபா 5,101,900 ஆல் அதாவது 19 சதவீதத்தால் வீழ்ச்சிடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் தாபிக்கப்பட்டுள்ள இரண்டு விற்பனை கூடங்கள் மற்றும் ஒரு ஞாபகார்த்த விற்பனைகூடமும் அம்பாந்தோட்டை ரிதீயகம சபாரி பூங்காவின் சிற்றுண்டிச்சாலையொன்றும் ஒரு ஞாபகார்த்த விற்பனைகூடமும் பெறுகை வழிகாட்டல் கோவையிலிருந்து விலகி குத்தகை அடிப்படையில் தேசிய உணவு மேம்பாட்டுச் சபை, மில்கோ (தனியார்) கம்பனி மற்றும் வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு என்பவற்றிற்கு வழங்கப்பட்டிருந்தன. அம்பாந்தோட்டை ரிதீயகம சபாரி பூங்காவின் சிற்றுண்டிச்சாலையும் ஞாபகார்த்த விற்பனைகூடத்தையும் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக உரிய தரப்பினருடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்டிருந்த எந்தவொரு விற்பனை கூடம் தொடர்பாகவும் எழுத்துமூல உடன்படிக்கைக்கு வருவதற்கும் வாடகையை அறவிடுவதற்கும் நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வாகொல்ல மிருகப் பூங்கா மற்றும் அம்பாந்தோட்டை ரிதீயகம சபாரி பூங்காவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 45,003,804 ஆன மூலதனச் செலவினம் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் இம்மிருகக்காட்சிலைக்காக அதிகாரச்சட்டத்தின் சட்டரீதியான ஏற்பாடுகளை கருத்திற்கொள்வது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

2016 ஆம் ஆண்டின் தேசிய வனவிலங்குப் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் விற்பனை மேம்படுத்தல், மற்றும் விளம்பரம், கல்வி மற்றும் ஆராய்ச்சி செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,000 ஆன நிதிஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 04 மிருககாட்சிசாலைகளின் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 480,000,000 தொகையான நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 408,947,493 தொகை அதாவது 85 சதவீதமும் புதிய நிர்மாணத்திற்கான இயந்திரங்களுக்காகவும் ஏனைய கொள்வனவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்ட ரூபா 30,000,000 தொகையான நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 29,887,820 தொகை அதாவது 99.6 சதவீதமும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

## 4.4 தாமதமான செயற்திட்டங்கள்

(அ) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 131,000,000 பெறுமதியான 05 நிர்மாணச் செயற்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டிருந்தது. அது மொத்த மூலதன செலவின மதிப்பீட்டின் 27 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந் நிர்மாணச் செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட, ரூபா 107,000,000 பெறுமதியான 10 நிர்மாணச் செயற்திட்டங்களுக்குரிய ஆரம்ப முற்பணத்தை விடுவித்தல், திட்ட நிர்மாண நடவடிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் அளவீட்டுப் பத்திரங்கள் தயாரித்தல் போன்ற ஆரம்ப நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய தெஹிவளை மிருககாட்சிசாலையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த புதிய கால்நடை வைத்தியசாலை கட்டிடத்தின் திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்னவல வாகொல்ல புதிய மிருககாட்சிசாலையின் சேவைக் கட்டிடத்திற்கு அருகில் எல்லை மதிலின் நிர்மாண வேலைகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அச்செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பின்னவல யானைகள் சரணாலயத்தின் பாதுகாப்பு மதில் மற்றும் பாதுகாப்பு கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 2016 நவம்பர் 24 ஆந் திகதிய செயற்திட்டத்தை அளிப்புச் செய்யும் கடிதத்தின் பிரகாரம் குறித்த கடிதத்தின் திகதியிலிருந்து 14 நாட்களுக்குகள் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், கடிதத்திலிருந்து 47 நாட்கள் கடந்ததன் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் 09 வரை செயற்திட்டத்தின் காலஎல்லையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2017 யூன் 28 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே 08 விடயங்கள் தொடர்பாக 82 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தப் பதிவேடொன்று பேணப்படுவது தொடர்பில் கவனம் தேவைப்படுகின்றது.